தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 அக்டோபர் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் **பேரவை** மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

வகுப்பில் பின்தங்கிய அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி

*17. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வகுப்பில் பின்தங்கியிருக்கும் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அப் பள்ளியின் ஆசிரியர்களைக் கொண்டே மாலை நேரங்களில் பிரத்தியேக வகுப்புகள் நடத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை

ஆடு வளர்ப்புப் பண்ணைகள்

*18. வினா—திரு. ரா. ரா முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போது ஆடு வளர்ப்புப பணணை எந்தெந்த மாவட்டங்களில் உள்ளது ?

(இ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்போது தென்னாற்காடு மாவட்டத்துள்ள சின்னசேலத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூரிலும் ஆட்டுப் பண்ணைகள் உள்ளன. உதகையில் ஆடு வளர்ப்பு ஆராய்சி நிலையம் ஒன்றும் உள்ளது. இவை தவிர ஓசூர், புதுக்கோட்டை, அபிஷேகப்பட்டி, செட்டிநாடு ஆகிய ஊர்களிலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஆடுகள் வளர்ச்சிக்கான பிரிவுகள் இருக்கின்றன.

(இ) இது பற்றி விவர அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(* 191-194-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)